செய்தி வெளியீடு எண்: 74 நாள்: 29.01.2020

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.1.2020) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில் 91 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு பல்வழி பரிமாற்ற மேம்பாலம் மற்றும் வண்டலூர் – மண்ணிவாக்கம் வரையிலான 2.65 கிலோ மீட்டர் நீள பிரதான சாலையினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், நாமக்கல், திருப்பூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம் கோயம்புத்தூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 119 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு இரண்டாம் அடுக்கு மேம்பாலம் மற்றும் 15 ஆற்றுப் பாலங்களையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உட்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள்அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில் 91 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலை எண்.45–யை சென்னை வெளிவட்டச் சாலையுடன் இணைக்கும் வகையில் இரயில்வே மேம்பாலத்துடன் கூடிய ஒரு ஏறு தளம் மற்றும் இரண்டு இறங்கு தளங்களுடன் கூடிய பல்வழி பரிமாற்ற மேம்பாலம் மற்றும் வண்டலூர் – மண்ணிவாக்கம் வரையிலான 2.65 கிலோ மீட்டர் நீள பிரதான சாலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், புதுச்சத்திரம் – கோவிந்தம்பாளையம் – சிங்களாந்தபுரம் சாலையில் கோவிந்தம்பாளையத்தில் 1 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், பொள்ளாச்சி – தாராபுரம் – கரூர் சாலையில் ரெட்டிப்பாளையம் பிரிவில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தாராபுரம் – பூளவாடி சாலையில் வெங்கிட்டிபாளையத்தில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை – செஞ்சேரிமலை சாலையில் ஏரிப்பாளையத்தில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், கிருஷ்ணாபுரம் – தொண்டமான்துறை – அன்னமங்கலம் சாலையில் அன்னமங்கலத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் பெரம்பலூர் வட்டம், பெரம்பலூர் – ஆலம்பாடி சாலையில் ஆலம்பாடியில் 2 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்;

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வைத்தூர் சாலையில் வைத்திகோவிலில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; விருதுநகர் மாவட்டம், கரியாப்பட்டி வட்டம், மீனாட்சிபுரம் – ஏ. முக்குளம் சாலையில் மேலகல்லன்குளத்தில் 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் அருப்புக்கோட்டை – குருந்தமடம் சாலையில் குருந்தமடத்தில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், முதுகுளத்தூர் – உத்திரகோசமங்கை சாலையில் தேரிருவேலியில் 1 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பொள்ளாச்சி – வால்பாறை சாலையில் பிரிந்து ஆனைமலை – பூலாங்கிணர் சாலையில் இணையும் இடமான கரியாஞ்செட்டிபாளையத்தில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கோவை மாநகரம், காந்திபுரம் பகுதியில், சின்னசாமி சாலை – 100 அடி சாலையில் இரண்டாம் அடுக்கு மேம்பாலம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்;

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், வளர்புரம் – கிருஷ்ணாபுரம் சாலையில் கிருஷ்ணாபுரத்தில் 5 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், மேல்பாக்கம் கண்ணப்பாளையம் சாலையில் ஆவடியை இணைக்கும் கூவம் ஆற்றின் குறுக்கே கண்ணப்பாளையத்தில் 6 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் பொன்னேரி வட்டம், சென்னை–

புலிகாட் சாலையில் பிரிந்து செல்லும் புதுவாயல் – புலிகாட் சாலையில் ஆரணி ஆற்றின் குறுக்கே பொன்னேரியில் 12 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், கோனேரிராஜபுரம் கிராமச்சாலையில் செ.புதூர் கிராமத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்;

என மொத்தம் 211 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை மாநகர சாலைகள் கோட்டத்திற்கு 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான சாலைகளை துப்புரவு செய்யும் 6 இயந்திர வாகனங்கள், சாலைகளில் ஏற்படும் குழிகளை (Pot holes) சரிசெய்யும் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு இயந்திர வாகனம் மற்றும் சிறிய உருளை இயந்திரம்; மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களில் தேங்கியுள்ள கசடுகளை உறிஞ்சிட 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு இயந்திர வாகனம் மற்றும் மண் அகற்றும் சிறிய இயந்திரம் ஆகியவற்றை நெடுஞ்சாலைத் துறையின் சாலை பராமரிப்பு பயன்பாட்டிற்காக வழங்கிடும் அடையாளமாக, 3 அலுவலர்களுக்கு அவ்வாகனங்களுக்கான சாவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திருமதி என். சாந்தி, தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) திரு.எம்.கே. செல்வன், தலைமைப் பொது மேலாளர் (தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்) திரு.ஒய்.ஆர். பாலாஜி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 29.1.2020**